**அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் - 2 - 2019**

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் 2 இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2016 மார்ச் 17 ஆந் திகதிய எஸ்எல்- பி 115 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாம், அப்போதைய நகர அபிவிருத்தி, மற்றும் நீர் வழங்கல் அமைச்சான தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. அநுராதபுரம் மாவட்டத்தில் பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்குதல் மற்றும் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிப்பதன் மூலம் நீர் வழங்கல் மேவுகையை அதிகரித்தல் அவற்றின் மூலம் செயற்திட்டப் பகுதியில் சுகாதார நிலை மற்றும் சுற்றாடல் வாழ்க்கைக்கு பங்களிப்பு செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 31,598 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 27,301 மில்லியனானதுடன் அதில் ரூபா 26,779 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 23,137 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 4,819 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 4,164 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்பு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் கட்டம் 2 அதன் நடவடிக்கைகளை 2017 யூனில் ஆரம்பித்திருந்ததுடன் 2024 மார்ச் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.1. **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
| --- | --- | --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 வரை இலங்கை மத்திய வங்கியால் பேணப்பட்ட விசேட ஜென் கணக்கின் ஊடாக மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு நாணய கொடுக்கல் வங்கல்களில் பெறப்பட்ட ரூபா 1.25 மில்லியன் நாணய மாற்று இலாபம் நடைபெறும் வேலையாக தவறுதலாக காட்டப்பட்டிருந்தது. | 1.25 | நடைபெறும் வேலை அதிகரித்துக் காட்டப்படுவதுடன் சொத்துக் கணக்கு குறைத்தக் காட்டப்படுகின்றது. | சாதாரணமாக கடந்த ஆண்டுகளின் போது தொடர்ச்சியாக ஜென் மதிப்பிடப்படுகின்றது. எனவே, கட்டம் II கணக்கு மத்திய வங்கியில் உள்ள பணத்தின் தொகை திரண்ட மீதியாக இருந்தது.<br>இலங்கை மத்திய வங்கியிலிருந்து இந்த கணக்கு மீதி விபரங்கள் வேண்டப்பட்டது ஆனால் பெறப்பட்டிருக்கவில்லை.<br>(வேண்டப்படுகின்ற போது அரச கணக்காய்விற்கு பிரதி இணைக்கப்பட்டு பிரதி அனுப்பப்பட்டது)<br>இலங்கை மத்திய வங்கி செயற்திட்டத்திற்கு சாதகமான மீதி விடுவித்திருக்கவில்லை. (இ.ரூபா பட்டியல் கொடுப்பனவுடன் தொடர்புபட்டது)<br>ஆகவே, அந்த மீதிகள் தற்போதைய நடைமுறை மற்றும் வழிகாட்டலின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடைபெறும் வேலை கணக்கிற்கு எடுக்கப்படுகின்றன. | நாணய மாற்று சொத்து கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்டத்தின் பௌதீக முன்னெற்றம்

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்றிட்டம் கட்டம் 02 பாதுகாப்பற்ற நிலத்தடி நீரில் தங்கியிருக்கின்ற கெப்பிட்டிக்கொல்லாவ, மதவியா, ஹொரவப்பத்தான மற்றும் ஹகட்டகஜ்டிக்கிலியா பிரதேச செயலக பிரிவு மக்களிற்கு அமுலாக்கப்படுகிறது. எனவே, அரசாங்கம் குறைவான காலப்பகுதிக்குள் மற்றும் தாமதமில்லாமல் இந்த பகுதியில் நீர் வழங்கல் செயற்திட்டங்கள் அமுலாக்குவதற்கு முன்னுரிமை வழங்கியிருந்தது. ஆரம்ப அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், செயற்றிட்டத்தின் கட்டம் 02 ஆனது 2016 சனவரியில் தொடங்கியிருந்ததுடன் 5 ஆண்டுகளிற்குள் 2021 சனவரி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் விரிவான வடிவமைப்பு தண்ணீர் வளம் மாற்றியமையால் செயற்திட்டம் தொடங்கிய திகதியிலிருந்து 38 மாதங்கள் கடந்த பின்னர் 2020 ஆகஸட் 31 அளவிலேயே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. ஆகவே, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் அடையப்பட்டிருக்கவிலலை. மெதுவான முன்னேற்றத்தின் விளைவால், செயற்திட்ட அமுலாக்கல் காலப்பகுதி 2024 மே மாதம் வரை பெறப்பட்டிருந்தது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (i) | செயற்திட்டத்தின் விரிவான வடிவமைப்பு மற்றும் கொள்வனவு உதவிக்கான ஆலோசனை ஒப்பந்தம் 2018 மார்ச் 26 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2020 பெப்ரவரி 20 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் விரிவான வடிவமைப்பு 2020 ஆகஸ்ட் 31 அளவிலேயே பூர்த்தியாக்கப்பட்டது. கொள்வனவு உதவிக்கான ஆலோசனை சேவையின் காலப்பகுதி 2021 ஆகஸ்ட் 31 வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும் ஆலோசனை ஒப்பந்தத்தின் உடன்படிக்கை 2020 பெப்ரவரி 20 இலிருந்து நீடிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம் | ஆலோசனை ஒப்பந்தத்தின் நீடிப்பிற்கான வேண்டுகை மற்றும் பீரேரிக்கப்பட்ட முரண் கட்டளை முரண் கட்டளை குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. முரண் கட்டளை தொடர்பில் ஆலோசனையாளரிடமிருந்து சில உடன்பாடின்மை காரணமாக பேரம் பேசல்கள் நடைபெறுகின்றன. ஒரு தடவை முரண் கட்டளை அனுமதிக்கப்பட்டு கால நீடிப்பும் வழங்கப்படும். | செயற்திட்டத்தின் கொள்வனவு உதவி வேலைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | விரிவான வடிவமைப்பு மற்றும் கொள்வனவு உதவிக்கான ஆலோசனை ஒப்பந்தத்திற்கான தொழில் ரீதியான பொறுப்பு காப்புறுதி 2025 யூன் வரை குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதியை மேவுவதற்கு பெறப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், உரிய தொழில் ரீதியான பொறுப்பு காப்புறுதி 2020 செத்தெம்பர் 01 முதல் 2021 செத்தெம்பர் 01 வரையான காலப்பகுதிக்காக மாத்திரம் மேவப்பட்டிருந்தது. | தொழில் ரீதியான பொறுப்பு காப்புறுதி 2025 யூன் வரை செயற்திட்டத்தின் குறைபாட்டுப் பொறுப்புக் காலப்பகுதி மேவப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட பணிப்பாளர் 2025 யூன் 30 வரை PLI ஐ நீடிப்பதற்கு ஆலோசனையை அறிவுறுத்தியிருந்தார். | 2025 யூன் வரை செயற்திட்டத்தின் குறைபாட்டுப் பொறுப்புக் காலப்பகுதியை மேவுவதற்கு தொழில் ரீதியான பொறுப்பு காப்புறுதி பெறப்பட வேண்டும். |
| (iii) | செயற்திட்டத்தின் நிர்மாண மேற்பார்வைக்கான ஆலோசனை ஒப்பந்தம் நிர்மாண ஒப்பந்தம் தொடங்குவதற்கு முன்னர் வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், நிர்மாண மேற்பார்வைக்கான ஆலோசனை ஒப்பந்தத்திற்காக அமைச்சரவை நியமித்திருந்த ஆலோசனை கொள்வனவு குழு 2020 செத்தெம்பர் 14 இல் நியமிக்கப்பட்டிருந்ததுடன் வரைவு கேள்வி ஆவணங்கள் மதிப்பாய்வுக்காக அனுப்பப்பட்டிருந்தது. எனவே, திருத்தப்பட்ட செயற்திட்ட அமுலாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம், நிர்மாண வெலைகள் மேற்பார்வைக்கான ஆலோசனையாளர் சேர்ப்பனவு 2021 யூன் வரையும் ஈடுபடுத்தப் பட்டிருக்கவில்லை. | நிர்மாண மேற்பார்வைக்கான ஆலோசனையாளர் சேர்ப்பதில் தாமதம். | நிர்மாண மேற்பார்வைக்கான ஆலோசனை ஒப்பந்தத்திற்காக அமைச்சரவை நியமித்திருந்த ஆலோசனை கொள்வனவு குழு 2020 செத்தெம்பர் 14 இல் நியமிக்கப்பட்டிருந்தது. வரைவு கேள்வி ஆவணங்கள் CPCC இன் மதிப்பாய்வுக்காக அனுப்பப்பட்டிருந்தது. புதிய நிகழ்ச்சித்திட்த்தின் பிரகாரம், ஆலோசனை ஒப்பந்தம் 2021 யூனிலிருந்து வழங்கப்பட வேண்டும். | மேலும் தாமதிக்காமல் நிர்மாண மேற்பார்வைக்காக ஆலோசனையாளர் சேர்பதை நிறைவேற்ற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | நீர்தேக்க வசதி நீர் சுத்திகரிப்பு பொறி, தண்ணீர் சேமிப்பு கட்டமைப்பு, எந்திரவியல், மின்னியல் மற்றும் கட்டிட வேலைகள் ஒப்பந்தம் என்பவற்றின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தின் முன்தகமைகள் 2020 மே 27 இல் கோரப்பட்டது. 2020 செத்தெம்பர் 15 இல் மூடப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், கோள்விக்கான ஒப்பந்தத்தின் 2020 ஒக்தோபர் 15 வரையும் கேள்வி ஆவணங்கள் இறுதியாக்கப்பட்டு தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம். | தொகுதி ஏ இற்கான ஒப்பந்த முன்தகைமைகள் 2020 மே 27 இல் கோரப்பட்டதுடன் 2020 செத்தெம்பர் 15 இல் மூடப்பட்டது. விண்ணப்பதாரிகளால் பின்வரும் பல வினாக்கள் எழுந்தது. ஆவணங்கள் மதிப்பாய்விற்காக 2020 ஒக்தோபர் 31 இல் TEC இற்கு தொகுதி ஏ சமர்ப்பிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டது. | தாமதமில்லாமல் தொழில்நுட்ப மதிப்பாய்வு பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) | செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், பிரதான பரிமாற்ற மற்றும் விநியோக (தொகுதி ஏ) இன் DI மற்றும் HDPE குழாய்கள் வழங்கி பொருத்துவதற்கான முன்தகைமைகள் 2020 மே 27 இல் கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முன்தகைமைக்கான மதிப்பாய்வு மற்றும் அனுமதி 2020 ஆகஸ்ட் 31 வரையும் இறுதியாக்கப் பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தம் வழங்குவதில் தாமதம். | தொகுதி பீ இற்கான ஒப்பந்த முன்தகைமைகள் 2020 மே 27 இல் கோரப்பட்டதுடன் 2020 ஆகஸ்ட் 11 இல் முன் தகைமைக்கான TEC இனுடைய சிபார்சுகள் பெறப்பட்டதுடன் 2020 ஒக்தோபர் 05 இல் SCAPC கூட்டம் நடைபெற்றது. எவ்வாறாயினும், மேலும் வேண்டப்பட்ட தெளிவுபடுத்தல்கள் விண்ணப்பதாரிகளிடமிருந்து கொரப்பட வேண்டுமென என தீர்மானிக்கப்பட்டது. தொகுதி பீ இன் ஆவணங்கள் மதிப்பாய்விற்காக 2020 ஒக்தோபர் 31 இல் TEC இற்கு சமர்ப்பிக்கப்பட்டதடன் தற்போது மதிப்பாய்வில் உள்ளன. | கொள்வனவு நடைமுறைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vi) ஆலோசனை ஒப்பந்தத்தில் பொது மக்கள் விழிப்பணர்வு பிரச்சாரம் மற்றும் கருத்தரங்குகள் நடாத்துவதற்கு ரூபா 4 மில்லியன் தொனை ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நோக்கங்கள் தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வு செய்தல் நோக்கிலும் எதிர்காலத்தில் பயிர்ச் செய்கை மற்றும் குடி தண்ணீர் நொக்கத்திற்கும் இடையில் தண்ணீர் ஒதுக்கீடு தொடர்பில் விவசாயிகளிடமிருந்து எதிர்ப்புக்களை தடுக்கும் நொக்கில் செயற்திட்டம் தொங்குவதற்கு முன்னர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமென வேண்டப்பட்ட பேதிலுமஆலோசனை ஒப்பந்தம் தொடங்கியதிலிருந்து 2020 ஆகஸ்ட் 31 வரையான 28 மாதங்கள் கடந்த பின்னர் செயற்திட்டமானது பொது மக்கள் விழிப்பணர்வு பிரச்சாரம் மற்றும் கருத்தரங்குகள் நடாத்துவதற்கு தவறியிருந்தது. | பொது மக்கள் விழிப்பணர்வு பிரச்சாரம் மற்றும் கருத்தரங்குகள் நடாத்துவதில் தாமதம். | கொள்வனவு உதவி காலப்பகுதியின் போது பொது மக்கள் விழிப்பணர்வு பிரச்சாரம் மற்றும் கருத்தரங்குகள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டது. விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் அநுராதபுரத்தில் நிர்மாண வேலைகள் ஆரம்பித்து தொடங்கவதற்கு முன்னர் நடாத்தப்பட வேண்டும். பொது மக்கள் விழிப்பணர்வு நிகழ்ச்சித் திட்டத்திற்காக பிரேரிப்பு ஒழுங்குசெய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டது. | திட்டமிடப்பட்டவாறு பொது மக்கள் விழிப்பணர்வு பிரச்சாரம் மற்றும் கருத்தரங்குகள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| 2018 யூலையிலிருந்து 2020 யூலை வரையான காலத்திற்காகா தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அலுவலகள் உள்ளடங்கலாக ஆலோசனையார் அலுவலக கட்டிடத்தின் வாடகைக் கட்டணமாக ரூபா 9.6 | ஆலோசனை ஒப்பந்தத்திற்கு வழங்கப்பட்ட காலப்பகுதி நீடித்தமையால் மேலதிக | ஏற்பட்ட மேலதிக வாடகை கட்டணங்கள் ஆலோசனை ஒப்பந்தம் நீடித்தமையால் ஏற்பட்டது. ஆலோசனை ஒப்பந்தம் நீடித்தமைக்கான காரணம் பிரிவு 1.3.அ இல் விளக்கப்பட்டுள்ளது. | பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் ஆலோசனை ஒப்பந்தத்தை பூர்த்தியாக்குவதற்கும் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவால் வேலைகளை நெருக்கமாக கண்காணிப்பதற்கும் |

| | | |
|---|---|---|
| மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2020 யூலையில் குத்தகை உடன்படிக்கை காலாவதியானதுடன் பட்டியலிடப்பட்ட திகதிக்குள் ஆலோசனை ஒப்பந்தத்தின் பூர்த்தியாக்குவதிலுள்ள தாதம் காரணமாக வாடகை கட்டணமாக மாதம் ஒன்றிற்கு ரூபா 260,150 வீதம் ரூபா 3.12 மில்லியன் மேலதிக கொடுப்பனவுகளுடன் 2021 யூலை வரை நீடிக்கப்பட்டிருந்தது. | வாடகைக்கட்டணம் செயற்திட்டத்தல் செலுத்த வேண்டியிருந்தது. | அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். |